டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
15.6.2023 வியாழக்கிழமை • மதுரை • பக்கங்கள் 23 • Online Edition • www.kaalaimani.com

# மொத்தவிலை பணவீக்க விகிதம் மே மாதத்தில் –3.48 சதமாக சரிவு

## மத்திய அரசு அறிவிப்பு




புது தில்லி, ஜூன் 14

கடந்த மே மாதத்தில் நாட்டின் மொத்தவிலை பணவீக்க விகிதம் மைனஸ் 3.48 சதவீதமாக சரிந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: தாதுப்பொருட்கள், உணவுப்பொருள், ஜவுளி, கச்சா எண்ணெய், ரசாயனபொருள் விலை குறைவால் பணவீக்கம் சரிந்துள்ளது.

மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் மார்ச் மாதத்தில் 1.34 சதத்தில் இருந்து சரிந்து ஏப்ரல் மாதத்தில் 0.92 சதமாக சரிந்துள்ளது. மே மாதம் இந்தியாவின் மொத்த விலை பணவீக்க விகிதம் தொடர்ந்து குறைவதற்கு முக்கிய காரணம் கனிம எண்ணெய்கள், அடிப்படை உலோகங்கள், உணவுப் பொருட்கள், ஜவுளிகள், உணவு அல்லாத பொருட்கள், கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, இரசாயன மற்றும் இரசாயன பொருட்கள் ஆகியவற்றின் விலை வீழ்ச்சி முக்கிய பங்காற்றியுள்ளது என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

இதேபோல் உணவுக் பணவீக்கம் மே மாதத்தில் 1.59 சதவீதமாகக் குறைந்துள்ளது. முதன்மைப் பொருட்களுக்கான மே மாத பணவீக்கம் 1.79 சதவீதம் குறைந்துள்ளது. எரிபொருள் மற்றும் மின் பணவீக்கம் மே மாதத்தில் 9.17 சதவீதம் குறைந்துள்ளது. இதற்கிடையில் மொத்த விலை பணவீக்கத்தில் முக்கிய பங்கைக் கொண்டுள்ள உற்பத்தி பொருட்களின் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் -2.42 சதமாக இருந்த நிலையில் தற்போது 2.97 சதவீதமாக குறைந்துள்ளது. 2015-க்கு பிறகு மொத்த விலை அடிப்படையிலான பணவீக்க விகிதம் மிகவும் குறைந்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

# தங்க இடிஎப் நிதிகளின் மொத்த மதிப்பு மே மாதத்தில் ரூ.23,128 கோடியாக அதிகரித்துள்ளது

புது தில்லி, ஜுன் 14

கடந்த மே மாதத்தில், தங்க இடிஎப் முதலீட்டு பிரிவில், ரூ.103 கோடி அளவுக்கு முதலீடு செய்யப்பட்டு உள்ளதாக மியூச்சுவல் பண்டு நிறுவனங்களின் சங்கமான, ஆம்பி தெரிவித்துள்ளதாக




செய்திகள் வெளியாகியுள்ளது. இந்நிலையில், தங்க இ.டி.எப்., நிதிகளின் மொத்த மதிப்பு, கடந்த ஏப்ரலில், ரூ.22,950 கோடியாக இருந்தது, மே மாதத்தில் ரூ.23,128 கோடியாக அதிகரித்துள்ளது. தங்கத்தில் முதலீடு செய்வதற்கான சிறந்த வாய்ப்புகளில் ஒன்றாக, இ.டி.எப்., பண்டுகள் கருதப்படுகின்றன. இவை, தங்கத்தை அடிப்படையாக கொண்ட, பங்குச் சந்தையில் பரிவர்த்தனை செய்யப்படும் நிதிகளாகும். தங்கத்தில் காகித வடிவில் முதலீடு செய்ய இத்திட்டங்கள் உதவுகின்றன.

தங்க இடிஎப் பண்டு முதலீட்டாளர்களின் கணக்குகள் எண்ணிக்கையும் ஏப்ரல் மாதத்தில் 47.13 லட்சத்தில் இருந்தது, மே மாதத்தில் 15,000 அதிகரித்து, 47.28 லட்சமாக அதிகரித் துள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் முதலீட்டாளர்கள் தங்க இடிஎப், பண்டுகளில் இருந்து ரூ.266 கோடியை வெளியே எடுத்த நிலையில், ஏப்ரலில் ரூ.124 கோடியை முதலீடு செய்துள்ளனர். கடந்த ஏப்ரலுடன் ஒப்பிடுகையில் மே மாத முதலீடு சற்று குறைந்ததற்கு காரணம், முதலீட்டாளர்கள் லாபத்தை எடுப்பதற் கான முயற்சியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மார்னிங் ஸ்டார் இந்தியா நிறுவனத்தின் ஆய் வாளர் மற்றும் ஆராய்ச்சி மேலாளர், மெல்வின் சான்டாரிட்டா தெரிவித் துள்ளதாவது: வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் அபாயங்கள் இன்னும் சூழ்ந்துள்ளன. எனவே, முதலீட்டாளர்கள் தங்க இடிஎப் பண்டுகளில் முதலீடுகளை அதிகளவில் மேற் கொள்கின்றனர். மேலும், தங்கத்தின் மீதான முதலீடு நிச்சய மற்ற காலங்களில் பாது காப்பான புகலிடமாக கருதப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# சுபன்சிரி மெகா நீர்மின் திட்டத்தின் சோதனை ஓட்டம்

## ஜூலை மாதத்தில் தொடங்கவுள்ளது

புது தில்லி, ஜூன் 14

சீன எல்லையில் என்எச்பிசி சார்பில் கட்டப்பட்டு வரும் சுபன்சிரி மெகா நீர்மின் திட்டத்தின் சோதனை ஓட்டம் ஜூலையில் தொடங்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து நிதி இயக்குநர் ராஜேந்திர பிரசாத் கோயல் தெரிவித் துள்ளதாவது: சுபன்சிரி மெகா நீர்மின் திட்டத்தின் முதல் பிரிவு டிசம்பருக்குள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024 இறுதிக்குள் அதன் 8 அலகுகளும் இயக்கப்படும் என்றார். 2 ஜிகாவாட் திறன் கொண்ட இந்த திட்டம் கடந்த 2003ம் ஆண்டு தொடங்கியது. சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எதிர்ப்பு காரணமாக இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால், இந்த திட்டத்துக்கான செலவு 3 மடங்காக (ரூ.21,413 கோடி) உயர்ந்தது.

ஒரு நீர்மின் திட்டத்தை தொடங்கும் முன் பல்வேறு துறைகளிட மிருந்து சுமார் 40 அனுமதி சான்றிதழ்களை பெற வேண்டியுள்ளது.

இந் நிலையில், கட்டுமானம் தொடங்கிய பிறகு ஏற்படும் எந்தவொரு தடங்கலும் சிக்கலான தாக மாறிவிடுகிறது என கோயல் தெரிவித்தார். சீனா மற்றும் பாகிஸ்தான் உடனான பதற்றமான எல்லைப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள இந்ததிட்டத்துக்கான அணைகள் உள்ளூர் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு மிகவும் உதவி புரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# தமிழக போக்குவரத்துத் துறைக்கு 600 பேருந்துகளை வாங்க டெண்டர் வெளியீடு

சென்னை, ஜூன் 14

தமிழக போக்குவரத்துத் துறைக்கு 150 தாழ்தள பேருந்துகள் உள்பட 600 புதிய பேருந்து வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) வெளியிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: தமிழகத்தில் 21 ஆயிரம் பேருந்துகள் இயங்கி வரும் நிலையில் 10 ஆயிரம் பேருந்துகள் 15 ஆண்டுகளைக் கடந்து விட்டன. மத்திய அரசு 15 ஆண்டுகள் உபயோகித்தபேருந்துகளை பயன்படுத்தக் கூடாது என்று அறிவித்துள்ளதால் தமிழக அரசு போக்குவரத்துத் துறை பழைய பேருந்துகளுக்குப் பதில் புதிய பேருந்துகளை வாங்குவதற்கான நடவடிக்கையில் இறங்கி உள்ளது.

சட்டப்பேரவையில் கடந்த நிதி நிலை அறிக்கையில் 1000 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதைத்தொடர்ந்து தற்போது முதல் கட்டமாக 600 பேருந்துகளை வாங்க அரசு ஒப்பந்தப்புள்ளி கோரி உள்ளது. இதில் 150 பேருந்துகள் முழுமையான தாழ்தள பேருந்துகளாக வாங்கப்படுகிறது. புகழ்பெற்ற பேருந்து கட்டும் நிறுவனங்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# காட்டுப்பள்ளியில் உள்ள எல் & டி துறைமுகத்தில் சன்சோதக் என்னும் நான்காவது ஆய்வுக் கப்பல் துவக்கம்



சென்னை, ஜுன் 14

இந்திய கடற்படைக்காக எல்&டி / ஜிஆர்எஸ்இ-யால் கட்டப்பட்டு வரும் ஆய்வு கப்பல் திட்டத்தின் நான்கு கப்பல்களில் நான்காவது கப்பல் சன்ஷோதக் சென்னை காட்டுப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக மத்திய அரசின் முதன்மை நீரியலாளர் வைஸ் அட்மிரல் ஆதிர் அரோரா கலந்து கொண்டார். கடற்படையின் கடல்சார் மரபுக்கிணங்க, திருமதி தன்வி அரோரா அதர்வண வேத மந்திரத்தை ஓதி கப்பலை துவக்கி வைத்தார். ஆராய்ச்சியாளர் என்று பொருள்படும் சன்ஷோதக் என்று பெயரிடப்பட்ட கப்பல், முதன்மையான ஆய்வுக் கப்பலாக செயல்படும்.

நான்கு ஆய்வுக் கப்பல்களை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சகம், கொல்கத்தா கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் (ஜிஆர்எஸ்இ) இடையே 2018 ம் ஆண்டு அக்டோபர் 30 அன்று கையெழுத்தானது. கட்டுமான உத்தியின்படி, முதல் கப்பல் கொல்கத்தாவில் கட்டப்பட்டு மீதமுள்ள மூன்று கப்பல்களின் கட்டுமான அலங்கார நிலை வரை, எல்&டி ஷிப் பில்டிங், காட்டுப்பள்ளிக்கு துணை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. திட்டத்தின் முதல் மூன்று கப்பல்களான சந்தயாக், நிர்தோக் மற்றும் இக்ஷாக் ஆகியவை முறையே 2021 டிசம்பர் 5, 2022 மே 26 மற்றும் 2022 நவம்பர் 26 ஆகிய தேதிகளில் தொடங்கப்பட்டன.

ஆய்வுக் கப்பல்கள், கடல்சார் தரவுகளை சேகரிக்க, புதிய தலைமுறை ஹைட்ரோகிராஃபிக் கருவிகளுடன், தற்போதுள்ள சந்தயாக் கிளாஸ் சர்வே கப்பல்களை மாற்றும். இந்த ஆய்வுக் கப்பல்கள் 110 மீ நீளம், 16 மீ அகலம் மற்றும் 3,400 டன் எடை கொண்டது. இந்தக் கப்பல்கள், ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட் மூலம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட டிஎம்ஆர் 249-ஏ எஃகு மூலம் தயாரிக்கப்பட்டது.

அவசர காலங்களில் மருத்துவமனைக் கப்பலாகவும் செயல்பட முடியும். நான்காவது ஆய்வுக் கப்பலின் தொடக்கம், மேக் இன் இந்தியா மற்றும் தற்சார்பு இந்தியா என்ற அரசின் திட்டங்களின் ஒரு பகுதியாக, உள்நாட்டு கப்பல் கட்டுமானத்தில் நமது உறுதியை வலுப்படுத்துகிறது.

# கோதுமை கையிருப்புக்குக் கட்டுப்பாடு மத்திய அரசு அறிவுறுத்தல்



புது தில்லி, ஜுன் 14

கோதுமையை கையிருப்பில் வைக்க கட்டுப்பாடு விதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு கட்டாயம் பின்பற்றப்படுவதை உறுதி செய்யுமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் வரை கோதுமையை கையிருப்பு வைக்க கட்டுப்பாடு விதித்து மத்திய அரசு உத்தரவு வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக மத்திய உணவுத்துறை திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில், 'மொத்த விற்பனையாளர்கள்/வணிகர்கள் 3,000 மெட்ரிக் டன் வரை கோதுமை இருப்பு வைத்திருக்கலாம். சில்லறை விற்பனையாளர்கள் 10 மெட்ரிக் டன் வரையும், சங்கிலி தொடர் விற்பனையகங்கள் தங்கள் சேமிப்பகங்களில் 3,000 மெட்ரிக் டன் வரையும் கோதுமை இருப்பு வைத்திருக்கலாம்.

இந்த உத்தரவு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதி வரை அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், மத்திய உணவுத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது: மத்திய உணவுத் துறைச் செயலர் சஞ்சீவ் சோப்ரா தலைமையில் மாநில மற்றும் யூனியன் பிரதேச உணவுத் துறைச் செயலர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மொத்த விற்பனையாளர்கள்/ வணிகர்கள், சில்லறை விற்பனையாளர்கள், சங்கிலி தொடர் விற்பனையாளர்களிடம் கோதுமை இருப்பு விவரத்தை மாநில அரசுகள் பெற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறையின் வலைதளத்தில் கோதுமை இருப்பு விவரம் பூர்த்தி செய்யப்படுவதை எளிதாக்க, அதுதொடர்பான பயனர் கையேடு மாநில அரசுகளுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளது. கோதுமை இருப்பு தொடர்பான மத்திய அரசின் அறிவிக்கையை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி, விற்பனையாளர்களிடம் கோதுமை கையிருப்பு அதிகமாக இருந்தால், அதுதொடர்பாக அறிவிக்கை வெளியிடப்பட்ட ஜுன் 12-ல் இருந்து 30 நாள்களில் அந்த வரம்புக்குள் கோதுமை இருப்பு அளவு கொண்டுவரப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விரைவில் 4ஜி சேவை வழங்கும் பிஎஸ்என்எல் சிம் கார்டுகளை மாற்ற அறிவுறுத்தல்




சென்னை, ஜுன் 14

பிஎஸ்என்எல் விரைவில் 4ஜி சேவையை தொடங்க உள்ள நிலையில், வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்ட பிஎஸ்என்எல் வாடிக்கையாளர்கள் தங்களிடம் உள்ள 2ஜி, 3ஜி சிம்கார்டுகளை அளித்துவிட்டு இலவசமாக 4ஜி சிம்கார்டுகளை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து, பிஎஸ்என்எல் வேலூர் முதன்மை பொதுமேலாளர் எ.வி.ஸ்ரீகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிஎஸ்என்எல் தொலைதொடர்பு நிறுவனம் சார்பில் வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட முழுஅளவிலான 4ஜி சேவை விரைவில் தொடங்கப்பட உள்ளது. மத்திய அரசின் ஆத்மநிர்பார் பாரத் திட்டத்தின்கீழ் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சிறந்த 4ஜி தொழில்நுட்பம் மூலம் இந்த நான்காவது தலைமுறை மொபைல் நெட்வொர்க் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

மேம்படுத்தப்பட்ட 4ஜி தொழில்நுட்ப சேவையின் மூலம் தற்போதைய நெட்வொர்க்கின் டேட்டா வேகம், தரம் நான்கு முதல் ஐந்து மடங்கு அதிகரிக்கப்பட உள்ளது. இதையொட்டி, முதல் கட்டமாக வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள அனைத்து 450 தொலைதொடர்பு கோபுரங்களும் மேம்படுத்தப்பட்ட 4ஜி தொழில்நுட்பத்திற்கு மாற்றப்படுகிறது. தவிர, கூடுதலாக 28 புதிய 4ஜி கோபுரங்களும் அமைக்கப்பட உள்ளன.

பிஎஸ்என்எல்லின் இந்த மேம்பட்ட 4ஜி சேவைகளை பெற்றிட தற்போது பிஎஸ்என்எல் 2ஜி, 3ஜி சிம் கார்டுகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் அவற்றை அருகிலுள்ள பிஎஸ்என்எல் வாடிக்கையாளர் சேவை மையங்கள், பிரான்சைசி அலுவலகங்கள், மேளா நடைபெறும் இடங்களில் அளித்து கட்டணமின்றி பிஎஸ்என்எல் 4ஜி சிம் கார்டுகளை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை விமான நிலைய புதிய முனையக் கட்டடத்தில் இண்டிகோ தனது சேவையை தொடங்கியுள்ளது

சென்னை, ஜூன் 14

சென்னை விமான நிலையத்தில் புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடத்தில், இண்டிகோ விமான நிறுவனம் தனது சேவையை தொடங்கியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: பயணிகள் கையாளும் திறனை அதிகரிக்க ரூ.1,260 கோடியில், 1.36 லட்சம் சதுர மீட்டரில் கட்டப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடத்தை பிரதமர் மோடி கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் தேதி திறந்து வைத்தார். இந்நிலையில் இண்டிகோ நிறுவனமானது ஜூன் 13ஆம் தேதி முதல் புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடம் டி2-ல் இருந்து தனது சர்வதேச நடவடிக்கைகளைத் தொடங்கியது.

தொழில்துறை நிபுணர்களின் கூற்றுப்படி, சர்வதேச முனையத்தில் இண்டிகோவின் செயல்பாடுகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், மற்ற விமான நிறுவனங்களும் இதைப் பின்பற்றும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடம் மாநி லத்தின் வளமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப் படுத்தும் வகையில் தனித்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் ஆண்டுக்கு 2.30 கோடி பயணிகள் பயணம்செய்து வரும் நிலையில், புதிய முனையம் திறப்பால் பயணிகள் எண்ணிக்கை 3 கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த புதிய முனையம் தமிழ் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாகும் வேளையில் கோலம், கோயில்கள் மற்றும் இயற்கை சூழலை முன்னிலைப்படுத்தும் பாரம்பரிய அம்சங்களை உள்ளடக்கியது.



# கடந்த நிதியாண்டில் சேமிப்பு கிடங்கு பரப்பளவு 5.13 கோடி சதுர அடியாக அதிகரிப்பு

புது தில்லி, ஜுன் 14

கடந்த நிதியாண்டில், சேமிப்பு கிடங்கிற்கான பரப்பளவு 5.13 கோடி சதுர அடியாக அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. மேலும், இதன் வாடகையும் 3 முதல் 8 சதம் வரை உயர்ந்துள்ளதாக நைட் பிராங்க் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. இது குறித்து நைட் பிராங்க் இந்தியா நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் உள்ள எட்டு முக்கிய நகரங்களில், சில்லரை விற்பனைத் துறையின் தேவையின் காரணமாக சேமிப்பு கிடங்குகளின் பரப்பளவு 5.13 கோடி சதுர அடியாக கடந்த நிதியாண்டில் உயர்ந்திருந்தது. மேலும், ஒரே ஒரு நகரம் தவிர மீதி ஏழு நகரங்களில் இதற்கான வாடகையும் 3 முதல் 8 சதம் வரை அதிகரித்துள்ளது.

கடந்த 2021-22 நிதியாண்டில் சேமிப்புக் கிடங்குகளின் மொத்த பரப்பளவு 5.13 கோடி சதுர அடியாக இருந்தது. குத்தகை பரப்பளவு, மும்பை, பெங்களூரு, கோல்கட்டா ஆகிய நகரங்களில் அதிகமாகவும், தேசிய தலைநகர் பிராந்தியம், புனே, ஹைதராபாத், சென்னை நகரங்களில் குறைவாகவும் இருந்தது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கடந்த 9 ஆண்டுகளில் இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 125 சதம் வளர்ச்சி அடைந்துள்ளது



புது தில்லி, ஜூன் 14

கடந்த ஒன்பது ஆண்டுகளில், இந்தியாவின் மருந்து மற்றும் மருந்துப் பொருட்கள் ஏற்றுமதி 125 சதவீதம் அதிகரித்து மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. 2013-14ல் ரூ. 90,415 கோடியாக இருந்த ஏற்றுமதி, 2022-23ல் ரூ. 2,04,110 கோடியாக அதிகரித்துள்ளது. இந்தியாவிலிருந்து செய்யப்படும் மொத்த ஏற்று மதியில் 5.71 சதவீதம் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஏற்றுமதியாகும். மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்தியா உலகளவில் 3வது இடத்தில் உள்ளது. அமெரிக்கா, பெல்ஜியம், தென்னாப்பிரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரேசில் ஆகிய 5 முக்கிய நாடுகள் உள்பட சுமார் 200 நாடுகளுக்கு ஏற்றுமதி நடைபெற்று வருகிறது.

உலகளாவிய தடுப்பூசி உற்பத்தியில் 60 சதவீதம் இந்தியாவில் செய்யப்படுகிறது. இது உலகின் மிகப்பெரிய தடுப்பூசித் தயாரிப்பு நாடாக உள்ளது. உலகிலேயே குறைந்த விலை தடுப்பூசிகளை அதிக அளவில் வழங்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும், மேலும் உலக அளவில் பொது மருந்துகளை அதிகம் வழங்கும் நாடாகவும் திகழ்கிறது. உலகளாவிய விநியோகத்தில் 20% பங்கை இந்தியா பெற்றுள்ளது. மேலும், இந்தியா நட்பு நாடுகளுக்கு தடுப்பூசி வழங்கும் மைத்ரி முன்முயற்சியின் கீழ் (மே 19, 2023 வரை) உலகம் முழுவதும் உள்ள சுமார் 100 நாடுகளுக்கு 298 மில்லியனுக்கும் அதிகமான கோவிட்-19 தடுப்பூசிகளை வழங்கியுள்ளது.

தன்னம்பிக்கையை அடைவதற்கும், உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும், துறையில் பெரிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும், மொத்த மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகிய 3 உற்பத்தியுடன் கூடிய ஊக்குவிப்பு திட்டங்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. 2023 மார்ச் மாதம் வரை, மொத்தம் ரூ 21,861 கோடி பிஎல்ஐ மூலம் முதலீடு பெறப்பட்டுள்ளது.

# பணவீக்கத்தை விட நாட்டின் வளர்ச்சிக்கே முன்னுரிமை அளித்தோம்: ஆர்பிஐ ஆளுநர்

லண்டன், ஜூன் 14

பணவீக்கத்துக்கு எதிரான நடவடிக்கை மெதுவாகவே இருக்கும் என, ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.



லண்டனில் நடைபெற்ற மத்திய வங்கிகளுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எங்களுடைய தற்போதைய மதிப்பீட்டின்படி, பணவீக்க செயல்முறை மெதுவாகவும், நீண்டதாகவும் இருக்கும். இது நடுத்தர காலப்பகுதியில், பணவீக்க இலக்கான 4 சதத்தை அடைய உதவக் கூடியதாக இருக்கும். நடப்பு 2023-24 நிதியாண்டில், பணவீக்கம் 5.1 சதமாக, பராமரிக்கும் வரம்புக்குள் இருக்கும் என ஆர்பிஐ கணித்துள்ளது.

ஆனாலும், அது 4 சத இலக்கை விட அதிகமாகவே இருக்கும். வளர்ச்சியின் நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு, விலைகளின் ஸ்திரத்தன்மையை பராமரிக்க வேண்டிய கட்டாயத்தில், ஆர்பிஐ உள்ளது.தொற்றுநோய் காலத்தில் பணவீக்கம் இலக்கை விட அதிகமாக இருந்தாலும், வளர்ச்சிக்கு தான் ரிசர்வ் வங்கி முன்னுரிமை அளித்தது. ஆர்பிஐயின் பணக்கொள்கை குழு, 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் பணவீக்கத்தை விட வளர்ச்சிக்கே முன்னுரிமை அளித்தது, பலவீனமான பொருளாதார நிலைமைகள் மற்றும் வினியோக தொடர்களில் பாதிப்புகள்ஆகியவற்றால் பணவீக்க அழுத்தங்கள் அதிகம் இருந்த போதிலும், வளர்ச்சிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

மேலும், நிதி மற்றும் நாணயக் கொள்கைகளின் செயல்திறன், மற்றும் ஒருங்கிணைந்த வங்கி சேவை, டிஜிட்டல்மயமாக்கல், வரி, உற்பத்தி மற்றும் உழைப்பு தொடர்பான பல்வேறு கட்டமைப்பு சீர்திருத்தங்கள் ஆகியவை கடந்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு, வலுவான மற்றும் நிலையான வளர்ச்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், வளர்ச்சி 6.50 சதமாக இருக்கும் என்று ஆர்பிஐ மதிப்பிட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில், இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சர்வதேச சந்தையில் விற்பனைக்கு அறிமுகமானது ரியல்மி ஜிடி 3 ஸ்மார்ட்போன்

புது தில்லி, ஜூன் 14

கடந்த பிப்ரவரி மாதத்தில் புதிய ரியல்மி ஜிடி 3 போன் அறிமுகம் மட்டுமே செய்யப்பட்டது. இந்நிலையில் இந்த போன் சர்வதேச சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டு விற்பனைக்குக் கொண்டுவரப்பட உள்ளது. இதன் சிறப்பம்சங்களாவது:




ரியல்மி ஜிடி 3 ஸ்மார்ட்போன் ஆனது 6.73-இன்ச் ஃபுல் எச்டி அமோல்ட் டிஸ்பிளே வசதியைக் கொண்டுள்ளது. இதன் டிஸ்பிளே வசதிக்கு அதிக கவனம் செலுத்தி யுள்ளது ரியல்மி நிறுவனம். மேலும் 144 ஹெர்ட்ஸ் ரெஃப்ரெஷ் ரேட், 450 நிட்ஸ் ப்ரைட்னஸ், 240 ஹெர்ட்ஸ் டச் சாம்ப்ளிங் ரேட் மற்றும் சிறந்த பாதுகாப்பு வசதியுடன் இந்த போன் அறிமுகமாகும்.

புதிய ரியல்மி ஜிடி 3 ஸ்மார்ட்போன் ஆனது சக்திவாய்ந்த ஸ்னாப்டிராகன் 8 பிளஸ் ஜென் 1 சிப்செட் வசதியைக் கொண்டுள்ளது. மேலும் இந்த புதிய போன் ஆண்ட்ராய்டு இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு அறிமுகமாகும். அதேபோல் ஸ்னாப்டிராகன் 8 பிளஸ் ஜென் 1 சிப்செட் சிறந்த செயல்திறன் கொடுக்கும், எனவே இந்த போனை நம்பி வாங்கலாம்.

50எம்பி பிரைமரி கேமரா + 8எம்பி அல்ட்ரா வைடு லென்ஸ் + 2எம்பி டெப்த் கேமரா என்கிற ட்ரிபிள் ரியர் கேமரா அமைப்பைக் கொண்டுள்ளது. பின்பு செல்பிகளுக்கும், வீடியோகால் அழைப்பு களுக்கும் என்றே 16எம்பி கேமராவைக் கொண்டுள்ளது இந்த அசத்தலான ஸ்மார்ட்போன். பின்பு எல்இடி பிளாஸ் மற்றும் பல கேமரா அம்சங்களைக் கொண்டுள்ளது இந்த ரியல்மி ஜிடி 3 ஸ்மார்ட்போன். 4500 எம்ஏஎச் பேட்டரி வசதி உள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. பின்பு இதை சார்ஜ் செய்ய 240 வாட்ஸ் பாஸ்ட் சார்ஜிங் வசதி உள்ளது. மேலும் இன்-டிஸ்பிளே கைரேகை ஸ்கேனர் மற்றும் பல்வேறு சென்சார் வசதிகளுடன் இந்த புதிய போன் அறிமுகமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் 5ஜி, வைஃபை, புளூடூத், என்எப்சி, 3.5எம்எம் ஆடியோ ஜாக் உள்ளிட்ட பல கனெக்டிவிட்டி ஆதரவுகளுடன் இந்த ரியல்மி ஜிடி 3 ஸ்மார்ட் போன் அறிமுகமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த ரியல்மி ஜிடி 3 ஸ்மார்ட்போன் ஆனது சற்று உயர்வான விலையில் தான் அறிமுகமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச சந்தையில் அறிமுகமானது 2024 கவாசகி எலிமினேட்டர் பைக்

மும்பை, ஜூன் 14

கவாசகி நிறுவனம் தனது 2024 எலிமினேட்டர் மாடலை சர்வதேச சந்தையில் அறிமுகம் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: இந்திய சந்தையில் கவாசகி மற்றும் பஜாஜ் ஆட்டோ இடையேயான கூட்டணியில், 175சிசி குரூயிசர் மாடல் முன்னதாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. அந்த வகையில், தற்போது 2024 வெர்சனில் எலிமினேட்டர் மாடல் மீண்டும் களமிறங்கி இருக்கிறது. இந்த முறை எலிமினேட்டர் மாடலில் 451சிசி, பேரலெல் டுவின் என்ஜின் வழங்கப்பட்டு உள்ளது. இந்த என்ஜின் கவசாகி நின்ஜா இசட்400 மாடலில் உள்ளதை சார்ந்து உருவாக்கப்பட்டு இருக்கிறது. புதிய எலிமினேட்டர் மாடல் நியோ-ரெட்ரோ டிசைன் கொண்டுள்ளது.

இதில் உள்ள அகலமான ஹேண்டில்பார் மற்றும் சென்ட்ரல் ஃபூட்பெக் அதிக சவுகரியமான அனுபவத்தை வழங்குகிறது. மேலும் இந்த மாடலில் வட்ட வடிவம் கொண்ட எல்சிடி இன்ஸ்ட்ரூமென்ட் பேனல் வழங்கப்பட்டு இருக்கிறது. இது டிஜிட்டல் ஸ்பீடோமீட்டர், டக்கோமீட்டர், கியர் பொசின் இன்டிகேட்டர், கடிகாரம், ஒடோமீட்டர், இரு ட்ரிப் மீட்டர்கள், ரேன்ஜ் மற்றும் ப்ளூடூத் கனெக்டிவிட்டி உள்ளிட்டவை வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த மாடல் முற்றிலும் புதிய குறைந்த எடை டிரெலிஸ் ஃபிரேம் கொண்டு உருவாக்கப்பட்டு இருக்கிறது.

பிரேக்கிங்கிற்கு இந்த மாடலின் முன்புறம் 310 மில்லிமீட்டர் செமி-ஃபுளோடிங் டிஸ்க் பிரேக்குகள், பின்புறம் 220 மில்லிமீட்டர் டிஸ்க் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த மாடலில் 18 இன்ச் / 16 இன்ச் அலாய் வீல்கள் உள்ளன. என்ஜினை பொருத்தவரை புதிய மாடல், ஏற்கனவே இசட் 400 மாடலில் பயன்படுத்தப்படும் 399சிசி பேரலல் டுவின் யூனிட்-இல் ஸ்டிரோக் அளவை 6.8 மில்லிமீட்டர்கள் வரை நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. இந்த என்ஜின் செயல்திறன் பற்றி இதுவரை எந்த தகவலும் இல்லை. எனினும், இது இசட் 400-இல் வெளிப்படுத்தும் 47.3 ஹெச்பி பவர், 37 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை விட அதிகளவு வெளிப்படுத்தும் என்று தெரிகிறது. 2024 கவாசகி எலிமினேட்டர் மாடல் அமெரிக்க சந்தையில் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. விரைவில் மற்ற நாடுகளிலும் அறிமுகம் செய்யப்படலாம். இந்த மாடலின் இந்திய வெளியீடு குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை.

# 8 ஜிபி ரேம் கொண்ட சியோமி பேட் 6 இந்திய சந்தையில் அறிமுகம்



புது தில்லி, ஜூன் 14

சியோமி நிறுவனம் ஏற்கனவே அறிவித்ததை போன்றே இந்திய சந்தையில் தனது புதிய பேட் 6 டேப்லெட் மாடலை அறிமுகம் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. புதிய சியோமி பேட் 6 மாடலில் 11 இன்ச் 2.8கே எல்சிடி ஸ்கிரீன், 144 ஹெர்ட்ஸ் ரிப்ரெஷ் ரேட், எச்டிஆர் 10, டால்பி விசன் மற்றும் யுனிபாடி மெட்டல் டிசைன் வழங்கப்பட்டு இருக்கிறது. ஸ்னாப்டிராகன் 870 பிராசஸர் கொண்டி ருக்கும் பேட் 6 மாடலில் அதிகபட்சம் 8 ஜிபி ரேம் வழங்கப்பட் டுள்ளது. இத்துடன் குவாட் ஸ்பீக்கர் செட்டப், டால்பி அட்மோஸ், 8840 எம்ஏஹெச் பேட்டரி மற்றும் 33 வாட் ஃபாஸ்ட் சார்ஜிங் வசதி வழங்கப்பட்டு இருக்கிறது.

மேலும் யுஎஸ்பி டைப் சி ஆடியோ, வைபை 6, ப்ளூடூத் 5.2 வழங்கப்பட்டு இருக்கிறது. சியோமி பேட் 6 மாடலில் புகைப்படங்களை எடுக்க 13 எம்பி பிரைமரி கேமரா சியோமி பேட் 6 டேப்லெட் மாடல் மிஸ்ட் புளூ மற்றும் கிராஃபைட் கிரே என இரண்டு விதமான நிறங்களில் கிடைக்கிறது. விற்பனை அமேசான் மற்றும் எம்ஐ வலைதளங்கள் மற்றும் ஆஃப்லைன் ஸ்டோர்களில் விற்பனை செய்யப்பட இருக்கிறது. விற்பனை ஜூன் 21 ஆம் தேதி துவங்க இருக்கிறது. இதன் 6 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி மாடல் விலை ரூ. 26,999 என்றும் 8 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி மாடல் விலை ரூ. 28,999 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.



# நாட்டில் வாகன விற்பனை இரட்டை இலக்க வளர்ச்சி

## இந்திய மோட்டார் வாகனதயாரிப்பாளர்கள் கூட்டமைப்பு தகவல்

புது தில்லி, ஜூன் 14

நாட்டில் கடந்த மே மாதத்தில் வாகன விற்பனை இரட்டை இலக்க வளர்ச்சி கண்டுள்ளதாக இந்திய மோட்டார் வாகன தயாரிப்பாளர்கள் கூட்டமைப்பு, வாகன தயாரிப்பு மற்றும் விற்பனை விபரங்களை வெளியிட்டுள்ளது. இது குறித்து இந்திய மோட்டார் வாகன தயாரிப்பாளர்கள் கூட்டமைப்பு தலைவர் வினோத் அகர்வால் தெரிவித்துள்ளதாவது: கடந்த ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடும் போது, வாகன விற்பனை, 18.00 சதம் உயர்ந்து, 18.08 லட்சம் வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும் வாகன தயாரிப்பும், 8.06 சதம் அதிகரித்து, 21.24 லட்சம் வாகனங்களாக உயர்வைக் கண்டுள்ளது.

இரு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்கள், இதர பயணியர் வாகனங்கள் என அனைத்து வகைவாகனங்களின் விற்பனை வளர்ச்சியும், இரண்டு இலக்கத்தில் இருக்கின்றன. மத்திய அரசு உறுதியான கொள்கைகளோடு செயலாற்றுகிறது. இதனால், வாகன துறையானது, மின்சாரம்உள்ளிட்ட பல்வேறு எரிபொருட்களில் இயங்கும் தொழில்நுட்பங்களுக்கு மாறி வரும் கட்டத்திலும், மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.



# உள்நாட்டிலேயே முதன்முதலில் உருவாக்கப்பட்ட திசு இணைப்பு சாதனத்துக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஒப்புதல்

புது தில்லி, ஜூன் 14

பாலூட்டிகளின் உறுப்புகளில் இருந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒருவகை திசு மருந்து, குறைந்த செலவில் தோல் காயங்களை மிகக் குறைந்த தழும்புகளுடன் விரைவாக குணப்படுத்தும் உயிரியல் மருத்துவ சாதனத்துக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஒப்புதல் அளித்துள்ளார்.




மத்திய அரசின் மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பின் தரச் சான்றிதழுக்கு தேவையான அனைத்து சட்டபூர்வ அம்சங்களையும் கொண்டுள்ளதால், ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனமான ஸ்ரீ சித்திரை திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் அனைத்து சட்டப்பூர்வ தேவைகளைப் பூர்த்தி செய்யும் டி வகுப்பு மருத்துவ சாதனங்களை உருவாக்கிய நாட்டின் முதல் நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

விலங்குகளிலிருந்து எடுக்கும் பொருட்களை மேம்பட்ட காயம் பராமரிப்புப் பொருட்களாகப் பயன்படுத்துவது புதியதல்ல. ஆனால், மருந்துக் கட்டுப்பாட்டாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தரமான தயாரிப்புகளைத் தயாரிப்பதற்கு உள்நாட்டு தொழில்நுட்பம் இதுவரை கிடைக்காமல் இருந்தது. எனவே, அத்தகைய பொருட்கள் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. பேராசிரியர் டி.வி.அனில்குமார் தலைமையில் 15 ஆண்டுகளாக நடந்து வந்த ஆராய்ச்சியின் பயனாக Cholederm எனப்படும் ஒருவகை திசு இணைப்பு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தீக்காயங்கள் மற்றும் நீரிழிவு காயங்களை குறைந்த வடுக்களுடன் குணப்படுத்துவது கண்டறியப்பட்டது.

இந்திய சந்தையில் கோலடெர்ம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், சிகிச்சைச் செலவு ரூ.10,000/-லிருந்து ரூ.2,000/- ஆகக் குறைக்கப்பட்டு, சாமானியர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# செங்குன்றாபுரத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம்

விருதுநகர், ஜுன் 14

விருதுநகர் மாவட்டம் செங்குன்றாபுரம் கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 88 பயனாளிகளுக்கு ரூ.36,48,500/- மதிப்பிலான நலிந்தோர் உதவித் தொகை உழவர் பாதுகாப்பு திட்ட உதவித்தொகை இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவிதொகை மாற்றுத்திறனாளி உதவித்தொகை ஆதரவற்ற விதவை உதவித்தொகை கணவரால் விடப்பட்டோர் உதவித்தொகை சாலை விபத்து நிவாரணம் உள்ளிட்ட உதவிகளையும் 335 பயனாளிகளுக்கு ரூ.43,94,367/- மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டா முழுப்புலம் பட்டா மாறுதல் உட்பிரிவு பட்டா மாறுதல்; புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் பிரதம மந்திரி ஆவாஷ் யோஜனா திட்டத்தின் கீழ் 26 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகள் 8 பயனாளிகளுக்கு தனிநபர் கழிப்பறை கட்டுவதற் கான வேலை உத்தரவு என ரூ.63,63,000/- மதிப்பிலான நலத்திட்டங்களையும் வழங்கினார்.

மேலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 10 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் 10 நபர்களுக்கு இலவச தேய்ப்புப் பெட்டிகளை என ரூ.120000/- மதிப்பிலான நலத்திட்டங்களையும் தோட்டக்கலைத்துறையின் மூலம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.7300/- மதிப்பிலான நலத்திட்டங் களையும் வேளாண்மைத்துறையின் மூலம் 6 பயனாளிகளுக்கு ரூ.896298ஃ- மதிப்பிலான நலத்திட்டங்களையும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு உணவுப்பெட்டகம் மக்களைத்தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்கள் என ரூ.30000/- மதிப்பிலான நலத்திட்டங்களையும் வழங்கினார்.

மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 7 பயனாளிகளுக்கு ரூ.700/- மதிப்பிலான பசுந்தீவன புல் கரணை மற்றும் தாது உப்புக் கலவைகளையும் என மொத்தம் 517 பயனாளிகளுக்கு ரூ.1.54 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் வழங்கினார்.

# தொல்லை தரும் குறுஞ்செய்திகளை தடுக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்: டிராய் அறிவுறுத்தல்

புது தில்லி, ஜூன் 14

தொல்லைதரும் குறுஞ்செய்திகள் அனுப்பப்படுவதை கட்டுப்படுத்தும் வகையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துமாறு, தொலைதொடர்பு நிறுவனங்களுக்கு, ஒழுங்குமுறை ஆணையமான டிராய் அறிவுறுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.




இது குறித்து விரிவான செய்தியாவது: தொலை தொடர்பு நிறுவனங்கள் வழிகாட்டுதல்களை பின் பற்றி நடக்குமாறும், தொல்லை தரும் குறுஞ் செய்திகள், அழைப்புகள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை, 30 நாட்களுக்குள் தெரிவிக்குமாறும், டிராய் கேட்டுக் கொண்டுள்ளது. அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள் வாயிலாக தங்களது வாடிக்கையாளர்களுக்கு வணிகத் தொடர்புகளை அனுப்ப, பத்து இலக்க மொபைல் எண்களைப் பயன்படுத்தும் நிறுவனங்கள், தொலைதொடர்பு நிறுவனங்களிடம் பதிவு செய்ய வேண்டும். இல்லையென்றால், அந்நிறுவனங்கள் பதிவுசெய்யப்படாத டெலிமார்க்கெட்டர்கள் என்று அழைக்கப்படுவர்.

இத்தகைய டெலிமார்க்கெட்டர்களால் பல தொல்லைகளை வாடிக்கையாளர்கள் சந்திக்க நேரிடுகிறது. இது குறித்து டிராய் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: பதிவுசெய்யப்படாத டெலிமார்க்கெட்டர்களில் சிலர், குறுஞ்செய்திகள் வாயிலாக, மோசடியான இணைப்புகளை அனுப்பி, மக்களுக்கு நிதி இழப்பை ஏற்படுத்துகின்றனர். இதை தடுக்க, என்னதான் நடவடிக்கைகளை எடுத்தாலும், பதிவுசெய்யப்படாத டெலிமார்க்கெட்டர்கள், புதிய யுக்திகளை பயன்படுத்தி, தவறுகளை தொடர்கிறார்கள். எனவே, இப்பிரச்னைகளை தீர்க்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த, அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு டிராய் தெரிவித்துள்ளது.

# சீன நிறுவனங்களின் உயர் பொறுப்பில் இந்தியர்களை நியமிக்க அறிவுறுத்தல்

புது தில்லி, ஜூன் 14

சீன மொபைல் போன் தயாரிப்பாளர்கள், இந்தியாவில், அவற்றின் வணிக நடவடிக்கைகளை நிர்வகிக்கும் முக்கிய பொறுப்புகளில் இந்தியர்களை அமர்த்துமாறு, மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகின்றன. இது குறித்து விரிவான செய்தியாவது: மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள், சமீபத்தில் சீன மொபைல் போன் தயாரிப்பாளர்கள் மற்றும் இந்திய செல்லுலார் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் கூட்டமைப்பினர் ஆகியோருடன் ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்தினர்.

இக்கூட்டத்தில் சீன மொபைல்போன் தயாரிப்பாளர்களான சியோமி, ஓப்போ, ரியல்மி, விவோ உள்ளிட்ட பல நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில், சீன மொபைல் போன் நிறுவனங்கள் அவற்றின், இந்திய வணிகத்தில், தலைமை செயல் அதிகாரி, தலைமை தொழில்நுட்ப அதிகாரி உள்ளிட்ட உயர் பொறுப்புகளுக்கு இந்தியர்களை நியமிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தியாவைச் சேர்ந்த ஒப்பந்த உற்பத்தியாளர்களை நியமிக்கவும், இந்திய வணிக நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் உற்பத்தியை பெருக்கவும், உள்ளூர் வினியோகஸ்தர்களை வேலைக்கு அமர்த்தவும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சீன நிறுவனங்கள், இந்தியாவில் வரி ஏய்ப்பு முயற்சிகளில் ஈடுபடக்கூடாது என்றும், சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# டாபர் நிறுவனத்தின் விளம்பர தூதராக நடிகை நோரா ஃபதேஹி நியமனம்



புது தில்லி, ஜூன் 14

டாபர் நிறுவனத்தின் விளம்பர தூதராக நடிகை நோரா ஃபதேஹி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: டாபர் இந்தியா நிறுவனம், தனது புதிய கூந்தல் எண்ணெயான டாபர் கூல் கிங் தண்டா டெல் விளம்பர தூதராக பாலிவுட் நடிகை நோரா ஃபதேஹியை நியமித்துள்ளது.

இது குறித்து டாபர் இந்தியா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் துணைத் தலைவர் அபிகே ஜுக்ரான் தெரிவிக்கையில், நுகர்வோர் இணைப்பை ஆழப்படுத்துவதில் ஃபதேஹி முக்கிய பங்கு வகிப்பார், குறிப்பாக ஹிந்தி பேசும் மக்கள் பகுதியில் பிராண்டின் தடத்தை அவர் விரிவுபடுத்துவார் என்று நாங்கள் நம்புகிறோம். டாபர் கூல் கிங்-கின் சரியான பிராண்ட் அம்பாசிடராக நோரா ஃபதேஹி உள்ளார். அவர் இளமையானவர், துடிப்பானவர் மற்றும் ஸ்டைலா னவர். டாபர் கூல் கிங் வழங்கும் குளிர்ச்சியான, புத்துணர்ச்சி யூட்டும் உணர்வை அவர் பிரதிபலிக்கிறார் என்று அவர் தெரிவித்தார்.



# நாமக்கல் நகராட்சியில் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் ஆட்சியர் ஆய்வு

நாமக்கல், ஜூன் 14

நாமக்கல் நகராட்சி, ஆர்.பி.புதூர் குட்டை தெரு, பூங்கா சாலை, கொசவம்பட்டி ஏரி ஆகிய இடங்களில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி, வடிகால் தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சியர் ச.உமா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



நாமக்கல் நகராட்சி பூங்கா சாலை அருகே நகராட்சி பொது நிதியின் மூலம் ரூ.39.00 லட்சம் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் கமலாலயம் குளத்தில் நாணல் புற்கள் வளர்ந்துள்ளதை அகற்றும் பணி நடைபெற்று வருவதையும் மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து ஆர்.பி.புதூர் குட்டை தெருவில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மழை நீர் வடிகால் கட்டமைப்புகளை தூர்வாரி மழைக்காலங்களில் மழைநீர் தங்கு தடையின்றி செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் கொசவம்பட்டி ஏரியில் கால்வாய் தூர்வாரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு மழைக் காலங்களில் மழை நீர் வடிந்து செல்ல ஏதுவாக பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் நாமக்கல் உழவர் சந்தையில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உழவர் சந்தையினை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என அலுவலருக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது, நாமக்கல் நகராட்சி ஆணையர் சென்னுகிருஷ்ணன், நகராட்சி பொறியாளர் சுகுமார் ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவின் இணையதளம் பாதுகாப்பானது மத்திய அரசு உறுதி




புது தில்லி, ஜூன் 14

இந்தியாவில் 2021 ஜனவரி மாதத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியது. இதற்காக கோவின் இணையதளம் தொடங்கப்பட்டது. தடுப்பூசிக்கான முன்பதிவு, தடுப்பூசி மையங்கள் உள்ளிட்டதகவல்கள் இதில் இடம் பெற்றிருந்தன.

தடுப்பூசி செலுத்திக் கொள்வோரின் விவரம் இதில் பதிவேற்றம் செய்யப்பட்டது. பிறகு தடுப்பூசி செலுத்திக் கொண்ட சான்றிதழும் இதிலிருந்து வழங்கப்பட்டது. இந்நிலையில் தடுப்பூசி செலுத்திக் கொண்ட அனைத்து இந்தியர்களின் தனிப்பட்ட தகவல்களும் இணைய தளத்தில் கிடைப்பதாக புகார் எழுந்தது. இதுகுறித்து விசாரணை நடத்துமாறு அரசுக்கு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுகுறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கோவின் இணையதளம் முற்றிலும் பாதுகாப்பானது. தகவல் கசிவு விவகாரம் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு செர்ட்-இன் (இந்திய கணினி அவசரகால எதிர் நடவடிக்கை குழு) கேட்டுக்கொள்ளப்பட்டது. இதில் கோவின் இணைய தளத்திலிருந்து நேரடியாக தகவல் கசியவில்லை என முதற்கட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கோவின் இணைய தளத்தில் தரவுகளின் பாதுகாப்புக்கு போதியபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தகவல் கசிந்துள்ளதாக வெளியான செய்தி குறும்புத்தனமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் அதானி காற்றாலை மின்உற்பத்தி அடுத்த ஆண்டு டிசம்பரில் தொடங்கும்



கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் அதானி குழுமத்தின் காற்றாலை மின்உற்பத்தி அடுத்தாண்டு இறுதிக்குள் தொடங்கும் என அந்நாட்டின் மின்துறை அமைச்சர் தெரிவித்துள் ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள மன்னாரில் 286 மெகா வாட் மற்றும் பூனேரியில் 234 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தி செய்யும் திட்டத்துக்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதற்கான ரூ.4,120 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது.

இந்நிலையில், கொழும்பில் பத்திரிகையாளர்களை சந்தித்த இலங்கை மின்துறை அமைச்சர் காஞ்சனா விஜேசேகர, மன்னார் மற்றும் பூனேரியில் 500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தயாரிக்கும் திட்டம் பற்றி அதானி மின்பரிமாற்ற நிறுவனம் மற்றும் திட்ட மேலாண்மை குழுவின் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர் வாக அதிகாரியுமான அனில் சர்தானா உடன் ஆலோசிக்கப்பட்டது. மேலும், இத்திட்டம் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள், வரும் 2024 டிசம்பருக்குள் திட்டத்தை முடிப்பதாக அதானி பசுமை எரிசக்தி குழுமம் கொடுத்த வாக்குறுதி ஆகியவை குறித்தும் கலந்து ஆலோசிக்கப்பட்டது, என்று தெரிவித்தார்.

